ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# இன்பத்துப் பாலின் கவித்துவம்

ஜெ.இந்துமதி & முனைவர் செ.சுப்புலட்சுமி

வேல்ஸ்பல்கலைக்கழகம், சென்னை.

bkmandhir@gmail.com

**ஆய்வுச்சுருக்கம் :-**

திருக்குறள் இன்பத்துப் பாலில் படித்து இன்புறத்தக்க பல குறட்ப்பாக்கள் குவிந்து கிடக்கின்றன. சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்களின் சுருங்கிய வடிவங்களாகவே காட்சியளிக்கின்றன இக்குறட்பாக்கள் எனலாம். களவு என்று சொல்லப்படுகின்ற காதல் வாழ்வையும், கற்பு என்று அறியப்படுகின்ற இல்லற வாழ்வையும் திருவள்ளுவப் பெருந்தகை சுவைபட நகர்த்திச் செல்லும் பாங்கு படித்து இன்புறத்தக்கது. அதில் காணப்படும் கவி தன்மை ஏராளம் அதை எடுத்து கூறுகிறது இவ்வாய்வு.

**ஆய்வுநோக்கம் :-**

திருக்குறள் அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் சொல்லப்பட்டது போலவே அருமையான, இனிய, காதல் மற்றும் இல்லறவாழ்விற்குச் சுவைதரும் பலசெய்திகள் இன்பத்துப்பாலிலும் சொல்லப்பட்டுள்ளன. இன்பத்துப்பாலில் தான் வள்ளுவரின் கற்பனை திறனும்,காட்சிகளை நாடக வடிவில் நம் கண்முன் நிறுத்தும் ஆற்றலும்,அவரின் மெல்லிய சிறப்புமிக்க நகைச்சுவை உணர்வும் சிறப்பாக வெளிப்படுகின்றன. அவரை ஒரு சிறந்த கவிஞராகவும் அடையாளம் காட்டுவது இன்பத்துப்பாலே ஆகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த இன்பத்துப்பாலில் சிலவற்றைக் கவிதை நோக்கில் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

திறவுச்சொல்:- உயிரிடை,மடந்தை,நகும்,வாய்ச் சொற்கள், வழுத்தினாள், அறவோர், வல்வரவு, ஊடுதல், வியக்கும்,உச்சம்,தருணம்

**முன்னுரை:-**

உலக பொதுமறையான திருக்குறள் எல்லாச் சமயத்தாரும் போற்றக்கூடிய வகையில் எல்லோருக்கும் பொதுவான ஒரு நூல் எழுதியிருப்பது வியப்பாகும். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலையும் அழகாக எடுத்துரைக்கிறது. வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளையும் எடுத்துரைக்கும் ஒரு சிறந்த வாழ்வியல் நூலாகும். சாதி,மதம்,மொழி,நாடு என்று வேறுபாடு இல்லாமல் மக்கள் அனைவருக்கும் பொருந்துவதாக உள்ளதால் உலகப் பொதுமறை என்று அழைக்கப்படுகிறது.திருக்குறளில் உள்ள ஒவ்வொரு குறளும் நமக்கு வாழ்வியல் அனுபவத்தை அள்ளித் தருகின்றது.

**இன்பத்துப்பாலின் கவித்துவம்:-**

இன்பத்துப்பாலில் அறம் உரைத்த அறவோரையும் காணவில்லை,அறிவுரை கூறிய ஆசிரியரையும் காணவில்லை,உண்மையைச் சொல்லப் போனால் திருவள்ளுவரையே காணவில்லை. இன்பத்துப்பாலில் இடம்பெற்றுள்ள 25 அதிகாரங்களில் 250 திருக்குறள்களில் ஆசிரியர் கூற்றாக ஒருபாடலும் இல்லை. மாந்தர் கூற்றாகத்தான் பாடல்கள் இருக்கின்றன. திருக்குறள் இன்பத்துப்பாலில் தலைவி கூற்று, தலைவன் கூற்று, தோழி கூற்று எனக் காதாபாத்திரங்கள் பேசுகின்றன. திருவள்ளுவர் பேசுவதாக தெரியவில்லை.உரையாசிரியர்கள் இக்கூற்றுகளை விளக்கி உரைத்துள்ளனர்.

இம்முறை சங்ககால அக இலக்கிய மரபு ஆகும். சங்க இலக்கியத்தில் உள்ள 80 விழுக்காடு அக இலக்கியங்கள் சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார் என்ற தொல்காப்பிய அகஇலக்கணத்தைப் பின்பற்றுபவை. சங்க இலக்கிய அகமரபை அப்படியே பின்பற்றிப் பாடியுள்ளார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். ஒரு வகையில் சொன்னால்.25 குறட்பாக்களும் 250 ஓரங்க நாடகங்களாக அமைந்துள்ளன.

தலைவியின் அழகைத் தலைவன் தான் வருணிக்க முடியும், தலைவன் மேல் தலைவிக்குள்ள ஆவலை, விருப்பத்தை அல்லது பிரிவுத் துன்பத்தை அவளே தான் சொல்ல வேண்டும் அல்லது உடனிருந்த தோழி சொல்ல வேண்டும்,புலவர் சொல்வது மரபன்று. இந்த தமிழ் மரபு, நம் நாகரிகத்தின் உச்சம்.இது திருக்குறள் இன்பத்துப்பாலில் சொல்லப்பட்டது சிறப்பு மிக்கது.

தலைவன் ஒருவன் தலைவி ஒருத்தியைக் கண்டு காதல் கொள்கின்றான். அவளுக்கும் அவன்மீது அன்பு தோன்றுகின்றது. ஆயினும், பெண்மைக்கே உரிய நாணம் தடை போடுவதால் தலைவன் தன்னை நோக்கும் போது தலைவி நிலத்தை நோக்குகின்றாள். அவன் தன்னைப் பார்க்காத தருணத்தில் தலைவி அவனை நோக்கி மெல்லப் புன்னகைத்துக் கொள்கின்றாள், இதனையே,

**யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும் (1904)**

என்கிறார் வள்ளுவப் பேராசான்.

காதல் வயப்பட்ட தலைவனும், தலைவியும் ஒருவரை ஒருவர் நோக்கிக் கொண்டிருக்கின்றனர். அங்கே வாய்ச்சொற்களுக்கு வேலையேயில்லாமல் போய் விடுகின்றது. கண்கள் பேசாதவற்றையா, மொழியும் எழுத்துக்களும் பேசிவிடமுடியும்.

**கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**

**என்ன பயனும் இல (1100)**

வெண்மதியையும், பெண்ணின் முகத்தையும் ஒப்புமைப்படுத்திப் பாடாத தமிழ்ப் புலவர்களோ, கவிஞர்களோ இல்லை என கூறலாம்.வள்ளுவரும் வெண்மதியும் தலைவியின் முகத்தையும் ஒப்புமைப்படுத்தி கூறியுள்ளார்.இரவு நேரத்தில் தன் காதலியைச் சந்திக்க வருகின்ற ஒரு தலைவன் வானத்தை அண்ணாந்து பார்க்கின்றான். அங்கே அழகான முழுநிலாக் காட்சியளிக்கின்றது. அந்நிலவோடு தன் காதலியின் முகத்தை ஒப்பிட்டுப் பார்க்கின்றான். நிலவைப் பார்த்து, "உன்னோடு என் காதலியின் அழகு பொருந்திய எழில் முகத்தை ஒப்பிடுவதே தவறு. நீயோ களங்கம் உடையாய் அதுமட்டுமன்று, தேய்கின்றாய்....வளர்கின்றாய், ஆனால் என் காதலியின் முகமோ களங்கம் சிறிது மற்றது" என்று தன் காதலியை நிலவை விட உயர்ந்தவள் என்கிறான்.

**அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல**

**மறுவுண்டோ மாதர் முகத்து (1117)**

தலைவன் ஒருவன் தனக்கும் தன் தலைவிக்கு உள்ள உறவைப் பற்றிக் "காதற் சிறப்புரைத்தல்" என்ற அதிகாரத்தில் பேசும்போது இவ்வாறு குறிப்பிடுகின்றான்.

**உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன**

**மடந்தையொடு எம்மிடை நட்பு (1122)**

இத்தலைவியொடு எனக்குள்ள நட்பு எப்படிப்பட்டது என்றால் உடம்புக்கு,உயிருக்கும் உள்ள தொடர்பு எப்படிப்பட்டதோ அப்படிப்பட்டது என்கின்றான். இங்கே உறவு என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் நட்பு என்ற சொல்லை அவன் பயன்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. காதலுக்கு இதைவிட அருமையான விளக்கம் எதனையும் கொடுத்துவிட முடியாதென்றே தோன்றுகின்றது. காதலுக்கு மிக முக்கியமானது நட்பு. அதுவே காதலின் தொடக்கம்.

**செல்லாமை உண்டேல் எனக்கு உரை மற்றுநின்**

**வல்வரவு வாழ்வார்க்கு உரை (1151)**

என்னை விட்டுப் பிரிந்து போக மாட்டேன் எனக் கூறுவதாக இருந்தால் என்னிடம் சொல். நான் பிரிந்து தான் போகிறேன்; ஆனால் விரைவில், சீக்கிரமாக வந்துவிடுவேன் என்று கூறுவதாக இருந்தால் என்னிடம் சொல்லாதே. நீ திரும்பி வரும்போது இங்கே யார் உயிரோடு இருப்பார்களோ அவர்களைப் பார்த்துக் கூறிவிட்டுச் செல்' எனத் தலைவி தலைவனிடம் கூறுகிறாள். இந்தத் திருக்குறளில் தலைவியின் ஏக்கம், தவிப்பு, பதைபதைப்பு, பிரிவுத்துயரம் அனைத்தும் தெரிகிறது.

தலைவனையே எதிர்பார்த்துக் காத்திருப்பதனால் தலைவியின் அழகான தோள்கள் மெலிந்தன. உடலில் பசலை படர்ந்தது. கை வளையல்கள் கழன்றன. அழுது அழுது கண்கள் ஒளியிழந்தன. தலைவன் சென்ற நாட்களைக் கோடிட்டுக் குறித்துக் கொண்டே வருவதனால் விரல்களும் தேய்ந்தன. இதனையே வள்ளுவர்

**வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற**

**நாளொற்றித் தேய்ந்த விரல் (1261)**

என்கிறார்.

பிறகு அவள் தன்னைத்தானே தேற்றிக் கொள்கின்றாள். “என் இனிய நெஞ்சே நீ தலைவனை உன்னிடத்தில் தானே வைத்திருக்கின்றாய்.பின்பு ஏன் அவர் பிரிந்து சென்றுவிட்டார் என எண்ணி உடலை வருத்திக் கவின் இழந்து மெலிந்து வருகின்றாய்." என வினவிக் கொள்கின்றாள். தலைவனைப் பிரிந்தும் அவன் நெஞ்சில் இருக்கிறான் என கூறுவதிலிருந்து அவளுடைய காதல் ஆழம் அதிகரித்து கொண்டே இருப்பதை உணர்த்துகிறாள்.

**ஊடலே அன்பை அதிகரிக்கும்:-**

மாந்தர்தம் உளவியளின் நுட்பத்தினை இன்பத்துப்பாலில் உணர்ந்து இன்புறலாம். புலவி நுணுக்கம் (132) என்ற அதிகாரம் உளவியலின் உச்சத்தின் உச்சம் எனலாம்.மென்மையான பெண்மையின் உச்சகட்ட உணர்வின் வீரியத்தைப் புலவி நுணுக்க அதிகாரத் திருக்குறட்பாக்கள் வெளிப்படுத்துகின்றன. வளமான கற்பனையின் உச்சத்திற்கே சென்ற மகா கவிஞரால் மட்டுமே,இல்லை,இல்லை,ஒரு தெய்வீக கவிஞரால் மட்டுமே இன்பத்துப்பாலைப் படைத்திருக்க முடியும். ஒவ்வொரு குறட்பாவிலும் தலைவன், தலைவி, தோழி என மூன்று மாந்தராகத் திருவள்ளுவர் ஒருவரே மாறி, மாறி அவரவர் உணர்ச்சி மற்றும் உணர்வுகளைத் தேக்கி வைத்திருப்பதை காணலாம். தலைவன் தலைவிக்கு இடையே இருக்கும் உறவின் உயிர்நாடி திருக்குறள் இன்பத்துப்பாலில் உள்ள குரல்களில் பொதிந்து இருக்கிறது.

**இல்லை தவறு அவர்க்கு ஆயிலும் ஊடுதல்**

**வல்லது அவர் அளிக்குமாறு (1321)**

"தலைவனிடம் தவறு ஒன்றும் இல்லை. ஆயினும் அவரோடு ஊடுகிறேன். பொய்யான காரணம் கருதி, பொய்யானக் கோபத்தை உருவாக்கிக் கொண்டு நான்தான் நடிக்கிறேன். ஏன் என்றால், அந்தப் பொய்யான சண்டைதான், என்மேல் அன்பை மிகைப்படுத்தும் " எனத் தலைவி கூறுகிறாள். காதல் வயப்பட்டவர்க்குள் கற்பனை மிக மிக அதிகம். அறத்துப்பால்,பொருட்பாலை விட இன்பத்துப்பாலுக்கு உரை எழுதுவது மிகமிகக் கடினம். இன்பத்துப்பாலில் உறைந்து வியக்கும் உணர்வுகளை, உணர்ந்து உரை செய்வது மிக கடினமான ஒன்று.

இன்பத்துப்பால் உள்ளத்து உணர்வுகளின் உச்சம். உணர்ச்சிகளின் சங்கமம். இந்த உச்சத்தை தொட்டவர்க்குத் தான் உள்ளத்து உணர்வின் அதிர்வினை உணர முடியும்.

**ஊடல் கருவி தும்மல்:-**

சில காலத்திற்குப்பின், தலைவனும் தலைவியும் மறுபடியும் ஒன்றாய் இணைகின்றனர். அவர்கள் மகிழ்ச்சியாய்ப் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் தலைவனுக்குத் தும்மல் வருகின்றது. அவன் தும்முவதைக் கண்ட தலைவி வாழ்க என்று வாழ்த்துகின்றாள். உடனேயே, யார் உம்மை நினைத்தார்கள், ஏன் உமக்குத் தும்மல் வந்தது எனத் தலைவனிடம் பல கேள்விகள் கேட்டு, அழுது அவனோடு ஊடல் கொள்கின்றாள். இன்றும் நம் கிராமங்களில் யாருக்காவது தும்மல் வந்தாலோ அல்லது புரையேறினாலோ அவ்வாறு செய்பவர்களை யாரோ நினைக்கின்றார்கள் என்று எண்ணும் வழக்கம் உள்ளது. இவ்வழக்கம் வள்ளுவர் காலத்திலும் இருந்தது என தெரிய வருகிறது

**வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்**
**யாருள்ளித் தும்மினீர் என்று** (1317)

தும்மலை ஒரு கருவியாகக் கொண்டு, தலைவனை படாதபாடு படுத்துகிறாள் தலைவி (1312, 1317, 1318.) தும்மினாலும் சந்தேகப்படுறாள். தும்முவதை அடக்கினாலும் சந்தேகப்படுறாள். "இந்தத் தும்மல் தனக்கு வரவில்லையே என ஏங்கவும் செய்கிறாள்",தலைவன் தும்மல் வருவதை வராமல் அடக்குகிறான். அப்போது தலைவி என் காதலர்
என்னை நினைப்பவர்போல் இருந்து பின்னர் நினையாமல் இருந்து விடுகின்றாரோ

**“நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்**
**சினைப்பது போன்று கெடும்”** (1203)

எனும் இக்குறட்பா கற்பனையின் உச்சம் தும்மலுக்கே தும்மல் வந்துவிடும் போல் இருக்கிறது. எனவே இன்பத்துப்பால் ஓர் இன்ப நாடகம். தமிழ்ப் பண்பாட்டின் உச்சம் எனலாம்.

**முடிவுரை:-**

இன்பத்துப் பாலின் ஒவ்வொரு குறளும் காதலை அணுவணுவாக உணர்ந்து எழுதப்பட்டது.வள்ளுவர் மனிதன் எப்படி வாழ வேண்டும்,எப்படி வாழக்கூடாது என அனைத்தும் சொல்கிறார்.அதுபோல காதல் என்பது இருபாலருக்குண்டான இனக்கவர்ச்சியென்று அது ஒரு வாழ்வியலாகும்.இரு உள்ளங்களின் சங்கமம்,வாழ்தலில் மட்டுமே உணரக்கூடிய மிக உன்னதமான தத்துவம்.எதிர்பார்ப்பு இல்லாத எந்த உறவுக்குமே அழிவென்பது இல்லை. காதல் வெளிப்பாடு அன்பு மட்டுமே.

உலகம் காலத்திற்கேற்ப மாறிக்கொண்டே இருக்கிறது அவற்றைப் போல அதில் வாழக்கூடிய மக்களும் காலத்திற்கேற்ப தங்களின் தொழில்களை மாற்றிக் கொண்டே தான் இருக்கின்றார்கள் அவ்வாறு எத்தனை மாற்றம் ஏற்பட்டாலும்,எதில் மாற்றம் ஏற்பட்டாலும் காதல் போற்றப்பட்டு என்றும் மாறாமல்,மங்காமல் மக்களிடம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.பல கவிஞர்கள் உருவாக இந்த காதல் உணர்வே காரணம்.

**துணைநூற்பட்டியல்:-**


1. வள்ளுவர் வழங்கும் வாழ்க்கை விலக்கு வாசவன் , வானதி பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு வருடம் – 1976
2. திறனாய்ச்சிந்தனைகள் , ஜான்சாமுவேல்.ஜி ஜி, மணிபதிப்பகம்,முதற்பதிப்பு வருடம், 1977.
3. பெருமை மிகுபாரதம் , லலிதா ராமகிருஷ்ணன், ஸ்ரீ ராம கிருஷ்ணமடம், 2-ஆம் பதிப்பு ஏப்ரல் 2016
4. அரங்க முதற்தொகுதி ,வர்த்தமானன் பதிப்பகம், முதற் பதிப்பு வருடம் 2022.
5. திருக்குறள் பதிப்பு வரலாறு , தாமரைச் செல்வி.தி செயராம் பதிப்பகம், முதற் பதிப்பு வருடம் 2012
6. அறியப்படாத தமிழகம்,பரமசிவன்.தொ, ஜெயா பதிப்பகம் , முதற் பதிப்பு வருடம் - 1997
7. திருக்குறளில் கற்பனை திறனும் நாடக நலனும்,க.த.திருநாவுக்கரசு,1973
8. அகப்பொருள் மரபும் திருக்குறளும், மு. சண்முகம் பிள்ளை,1980